**ஜூலை – 22**

# TNPSC துளிகள்

- இந்திய சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்க நாட்டை விட்டு வெளியேறி இந்திய நீதிமன்றங்களின் அதிகார எல்லையிலிருந்து வெளியே இருக்கும் பொருளாதார குற்றவாளிகளை குற்ற வழக்குகளிலிருந்து தப்பிப்பதை தடுப்பதினை நோக்கமாக கொண்ட தலைமறைவு நிதிமோசடி குற்றவாளிகள் மசோதா, 2018க்கு லோக் சபா அனுமதி அளித்துள்ளது.
    - இந்த மசோதா, ஏப்ரல் 2018-ல் குடியரசுத் தலைவரால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரச் சட்டத்திற்குப் பதிலாக இருக்கும்.
- 6 கிளை வங்கிகளை பாரத் ஸ்டேட் வங்கியுடன் இணைப்பதற்கான ஸ்டேட் வங்கிகள் (ரத்து மற்றும் திருத்த) மசோதா, 2017-னை மாநிலங்களவை ஒப்புதலளித்ததன் மூலம் பாராளுமன்றம் அதற்கு அனுமதி அளித்துள்ளது.
    - இந்த மசோதாவிற்கு ஏற்கனவே 2017-ம் ஆண்டில் மக்களவையில் பாராளுமன்றத்தின் மழைக்காலத் தொடரில் அனுமதி வழங்கப்பட்டது.
- இந்தியாவினால் துவங்கப்பட்ட சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டணியில் (International Solar Alliance - ISA) மியான்மர் இணைந்துள்ளது. சூரிய ஆற்றலினை உகந்த முறையில் பயன்படுத்துவதினை நோக்கமாகக் கொண்ட ISA-ன் இந்த கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட 68வது நாடு மியான்மர் ஆகும்.
- இந்தியா மற்றும் ஜப்பானின் கடல்வழி தொடர்பு பேச்சுவார்த்தையின் 4வது சுற்று புதுதில்லியில் நடைபெற்றது.
- ஜானா சிறு நிதி வங்கி அதன் வங்கிப்பணிகளின் வணிக ரீதியான தொடக்கத்தினை அறிவித்துள்ளது. 3 வருடங்களுக்குப் பிறகு இந்திய ரிசர்வ் வங்கி அதன் கொள்கையளவிலான ஒப்புதலைக் கொடுத்த பிறகு சிறு நிதி வங்கியாக மாறும் சமீபத்திய நுண்கடன் நிறுவனம் இதுவாகும்.
- 2019 FIFA மகளிர் உலகக் கோப்பை போட்டிகள் பிரான்சில் நடைபெற உள்ளது. நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் ஆடவருக்கான சர்வதேச கால்பந்து சாம்பியன்ஷிப் - 2022 FIFA உலகக் கோப்பை கத்தாரில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
- அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (Food and drug administration - FDA) கோவாவின் ஒரே மொத்த விற்பனை மீன் சந்தையான மார்கோவில் மற்ற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மீன்களில் பார்மலின் உள்ளதைக் கண்டறிந்த பிறகு கோவா அரசு தனது பிரதான உணவின் இறக்குமதியினை மற்ற அனைத்து மாநிலங்களிலிருந்தும் இறக்குமதி செய்ய 15 நாட்களுக்கு தடை செய்வதாக அறிவித்துள்ளது.
    - மீன்களை சேமித்து வைப்பதில் பதப்படுத்தும் பொருளாகப் பயன்படுத்தப்படும் பார்மலின் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய நச்சுதன்மை வாய்ந்த பொருளாகும்.

# தேசியச் செய்திகள்

## டெல்லி பேச்சுவார்த்தை (Delhi Dialogue X - DD X)

- மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜினால் தொகுத்து வழங்கப்பட்ட டெல்லி பேச்சுவார்த்தையின் 10வது பதிப்பு புதுதில்லியில் நடைபெற்றது.
- இப்பதிப்பின் கருத்துரு, "இந்தியா - ஆசியான் கடல்வழிக் கூட்டுறவினை வலுப்படுத்துதல்"
- DDX, வெளியுறவுத் துறை அமைச்சகத்தினால் (Ministry of External Affairs - MEA) வளரும் நாடுகளின் ஆராய்ச்சி மற்றும் தகவல் அமைப்பு முறையுடன் (Research and Information System for Developing Countries - RIS) இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- புதுதில்லியில் ஜனவரி, 2018-ல் நடைபெற்ற ஆசியான் - இந்தியா நினைவு உச்சிமாநாட்டிற்குப் பிறகு ஏற்பாடு செய்யப்பட்ட முதல் சிறப்பான நிகழ்வு இதுவாகும்.
- இந்தியா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் சபை (Association of Southeast Asian Nations - ASEAN) ஆகியவற்றிற்கிடையேயான அரசியல் பாதுகாப்பு, பொருளாதார மற்றும் சமூக-பண்பாட்டு தொடர்புகளை விவாதிப்பதற்கான முதன்மையான வருடாந்திர நிகழ்வு இந்த டெல்லி பேச்சுவார்த்தை ஆகும்.
- 2009-லிருந்து இது வருடாந்திர நிகழ்வாக நடத்தப்பட்டு வருகிறது.
- இப்பேச்சுவார்த்தையின் 9வது பதிப்பின் கருத்துரு, "ஆசியான் - இந்தியா உறவுகள் : அடுத்த 25 வருடங்களுக்கான கோர்வைகளைப் பட்டியலிடுதல்"
- இது ஆசியான் - இந்தியா கூட்டுறவின் 25வது ஆண்டு நிறைவினைக் குறிக்கிறது.

## ஊழல் தடுப்பு (திருத்த) மசோதா, 2013

- ஊழல் தடுப்பு சட்டம், 1988-ன் (Prevention of Corruption Act - PCA) வெவ்வேறு விதிகளை திருத்தி அமைப்பதற்கான ஊழல் தடுப்பு (திருத்த மசோதா) 2013-க்கு மாநிலங்களவை அனுமதி அளித்துள்ளது.
- PCA, 1988-ல் தற்பொழுது இருக்கும் விதிகளை ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான மரபுகளின் விதிகளுடன் இணைப்பதற்கு இந்தியா ஒப்புக் கொண்டது இவ்விதிகளை மறுபரிசீலனை செய்ய அவசியமாக்கியுள்ளது.

## WHAT'S NEW AND HOW IT'S DIFFERENT

*Changes to the Prevention of Corruption Act, which have been cleared by the Union cabinet*

**Change 1:** Fresh provisions under Section 7(2) differentiates between honest errors and corrupt motives
**Existing:** Law criminalises a public servant's act even in the absence of any *mens rea* (a criminal state of mind)

**Change 2:** Extend protection of prior sanction for prosecution to public servants who cease to hold office because of retirement, resignation etc
**Existing:** No such protection to retired public servants

**Change 3:** Prior sanction has to be taken from the Lokpal or Lokayukta for inquiring into and investigating "offences relatable to recommendations made or decision taken by a public servant in discharge of official functions or duties"
**Existing:** No sanction needed

**Change 4:** Longer prison term from minimum 3 years to maximum 7 years in corruption case for both bribe giver and bribe taker. The seven-year imprisonment brings corruption under the heinous crime category
**Existing:** Minimum six months. Maximum five years

**Change 5:** Attachment powers for trial court (special judge) instead of the district court
**Existing:** Attachment requires permission from district judges, which is often time-consuming

**Change 6:** Finish trial within two years
**Existing:** No timeframe. Four-year average is above 8 years

**Change 7:** Ambit expanded from individual bribe-givers to commercial entities
**Existing:** Action against only private individuals, not entities he or she is associated with


**Change 8:** Guidelines for commercial organisations to prevent persons associated with them from bribing a public servant. This essentially makes corporate bribery punishable
**Existing:** No mention of this

**Change 9:** Intentional enriching by public servants will be construed as criminal misconduct and possession of disproportionate assets as proof of such illicit enrichment
**Existing:** No such definition

**Change 10:** Non-monetary gratification included in ambit of gratification
**Existing:** Non-monetary gratification not specified

## மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989 - திருத்தம்

- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989-க்கான வரைவு திருத்தங்களை வழங்கியுள்ளது.
- இத்திருத்தம், தேசிய அளவிலான அனுமதியினை பெறும் அனைத்து வணிக ரீதியான வாகனங்களுக்கும் வாகன கண்காணிப்பு அமைப்பு கருவி (Vehicle Tracking System) மற்றும் FASTags ஆகியவற்றினை பெறுவதை கட்டாயமாக்கியுள்ளது.




## NDA அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம்

- ஜூலை 18, 2018 அன்று பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் கூட்டணிக் கட்சியான தெலுங்கு தேசம் கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் கேசினேனி ஸ்ரீநிவாஸ் தேசிய ஜனநாக கூட்டணி கட்சி (National Democratic Alliance - NDA) அரசிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தினை கொண்டு வந்தார்.
- மக்களவை சபாநாயகர் சுமித்ரா மகாஜன் இத்தீர்மானத்தினை ஏற்றுக் கொண்டு விவாதம் மற்றும் வாக்களிப்பதற்காக ஜூலை 20, 2018 தேதியினை அறிவித்தார்.
- சுதந்திரம் பெற்றதிலிருந்து இதுவரை 26 முறை நம்பிக்கையில்லா தீர்மானங்கள் மக்களவையில் கொண்டு வரப்பட்டுள்ளன.
- ஆச்சார்யா கிருபாளினி, இந்தியா-சீனா போருக்கு பிறகு உடனுக்குடன் ஆகஸ்ட், 1963ல் முதல் நம்பிக்கையில்லா தீர்மானத்தினை கொண்டு வந்தார்.
- பிரதம மந்திரியாக இந்திரா காந்தி அவர்கள் பெரும் அளவிலான நம்பிக்கையில்லா தீர்மானங்களை சந்தித்துள்ளார். அவை மொத்தம் 15 ஆகும்.
- ஜூலை 1979-ல் நடந்த விவாதத்தில் பிரதம மந்திரி மொரார்ஜி தேசாய் பதவி விலகியதைத் தவிர கொண்டு வரப்பட்ட எல்லா நம்பிக்கையில்லா தீர்மானங்களும் தோற்கடிக்கப்பட்டன.
- பாராளுமன்ற வரலாற்றில் 27வது முறையாக, 15 வருடத்தில் முதல் முறையாக

கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் இதுவாகும்.

- கடைசி நம்பிக்கையில்லா தீர்மானம், பிரதம மந்திரி அடல் பிகாரி வாஜ்பாய் அவர்களுக்கு எதிராக 2003-ல் கொண்டு வரப்பட்டதாகும்.

**NO-CONFIDENCE MOTION**

| | Three in last 25 years |
|---|---|
| **First-ever** no-confidence motion was moved in **1963** | **July 1993** \| Against the Narasimha Rao govt after Babri Masjib demolition (Govt won confidence vote) |
| **Total 26** so far (the one on July 20 will be 27th) | **April 1999** \| Against the Vajpayee govt (Govt lost by one vote) |
| **Indira Gandhi** govt had faced **maximum number** of no-confidence motion \| **15** | **August 2003** \| Against the Vajpayee govt (Govt won confidence vote) |
| | **July 2008** \| It was a trust vote after CPM-led Left Front withdrew support from the Manmohan Singh govt over the Indo-US nuclear deal. Govt proved its majority |

# சர்வதேசச் செய்திகள்

## பிரிக்ஸ் ஊடக மன்றம்

- பிரிக்ஸ் (BRICS) நாடுகளில் பிரிக்ஸின் விளக்கங்கள் மற்றும் புதிய ஊடக கூட்டுறவினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆகியவற்றை வலுப்படுத்துவதில் ஊடகங்களின் பங்கு மற்றும் பொறுப்புகளை பற்றி விவாதிப்பதற்காக தென் ஆப்பிரிக்காவின் கேப் டவுனில் பிரிக்ஸ் ஊடக மன்றம் திறக்கப்பட்டுள்ளது.
- மூன்றாவது பிரிக்ஸ் ஊடக மன்றம் "பிரிக்ஸ் ஊடக கூட்டுறவு - உள்ளார்ந்த உலக நியதியின்படி வளர்த்தல்" என்ற கருத்துருவின் அடிப்படையில் நடைபெற்றது.
- இந்த மன்றம் தென் ஆப்பிரிக்காவின் சுதந்திரமான ஊடகம் மற்றும சீனாவின் சின்ஹுவா செய்தி நிறுவனம் ஆகியவற்றால் இணைந்து தொகுத்து வழங்கப்பட்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## 'ஆபார் - ஆப்கி சேவா கா'

- சத்தீஸ்கர் முதல்வர் ராமன் சிங் மாநிலத்தில் ஆன்லைனில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்காக 'ஆபார் - ஆப்கி சேவா கா' என்ற ஆன்லைன் தகவு மற்றும் கைபேசி செயலியைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இது ஆன்லைன் ஓய்வூதிய மேம்பாட்டு அமைப்பினால் அமலபடுத்தப்படும்.
- இந்த ஆன்லைன் மேம்பாட்டு அமைப்பு, நிதி, கணக்குகள் மற்றும் ஓய்வூதிய இயக்குநரகத்தினால் ஓய்வூதியம் பெறுபவர்களுக்காக நிதித்துறையினால்

தயாரிக்கப்பட்டதாகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## "கங்கா விரிக்சரோபன் அபியான்"

- தேசிய தூய்மை கங்கா திட்டம் (National Mission for Clean Ganga - NMGC) ஐந்து கங்கை ஆற்றுப்படுகை மாநிலங்களான உத்தரகாண்ட், உத்திரப் பிரதேசம், பீகார், ஜார்க்கண்ட் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் 'கங்கா விரிக்சரோபன் அபியானை" தொடங்கி வைத்துள்ளது.
- ஒரு வார கால காடு வளர்ப்பு இயக்கம், 'சுப்பராம்ப் சப்தாவாக' ஜூலை 9, 2018லிருந்து ஜூலை 15, 2018 வரையிலான காலகட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- கங்கை ஆற்றின் 5 ஆற்றுப்படுகை மாநிலங்களின் மாநில வனத்துறைகள் முகமை மையங்களாக ஏற்படுத்தப் பட்டுள்ளன.
- கோட்ட கானக அலுவலர்கள் (Divisional Forest Officers - DFO) மாவட்ட நிலையிலான முகமை அலுவலர்களாகவும் மாநில அளவிலான தலைமை கானக அலுவலர்களாகவும் (Chief Conservator Forest - CCF) நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதற்காக உருவாக்கப் பட்டுள்ளனர்.

# மாநிலச் செய்திகள்

## உலகின் சிறந்த நகரங்களின் அறிக்கை

- டிராவல் & லெய்சர்ஸின் உலகின் சிறந்த நகரங்களின் அறிக்கையின்படி, உலகின் 15 சிறந்த நகரங்களில் உதய்ப்பூர் நகரம் 3வது இடத்தினைப் பெற்றுள்ளது.
- மெக்சிகோவைச் சேர்ந்த சான் மைகுயேல் டி அலென்டே மற்றும் ஓசகா ஆகிய இரண்டு நகரங்களும் முதல் இரண்டு இடங்களில் உள்ளன.
- காட்சிகள் மற்றும் அடையாளங்கள், பண்பாடுகள், சமையற்கலை, நட்புத்துவம், சந்தை மற்றும் மொத்த மதிப்பின் அடிப்படையில் இத்தரம் வழங்கப்பட்டுள்ளது.
- முன்பாக, 2009-ல் உலகின் பார்வையிடுவதற்கான சிறந்த நகரங்களின் பட்டியலில் இந்நகரம் முதலிடத்தில் இருந்தது. மேலும் 2017-ல் இது மூன்றாவது இடத்தினைப் பெற்றது.
- உதய்ப்பூர், ஏரிகளின் நகரம் என்றும் கிழக்கின் வெனிஷ் என்றும் அழைக்கப்படுகிறது. மேலும் தெற்கு ராஜஸ்தானில் உள்ள பைகோலா ஏரிக்கரையின் பிரம்மிப்பூட்டும் பகுதியினை இந்நகரம் கொண்டுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## மாற்று திறனாளிகளுக்கான தேசிய வேலைவாய்ப்பு மேம்பாட்டு மையம் (National Centre for Promotion of Employment for Disabled People - NCPEDP)

- NCPEDP-ன் நிர்வாக இயக்குனராக அர்மான் அலி நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர் ஜாவேத் அபிதிக்கு அடுத்து பதவி ஏற்பவர் ஆவார். அக்டோபர் 2018-ல் அர்மான் பொறுப்பேற்க உள்ளார்.
- 7 வடகிழக்கு மாநிலங்களிலிருந்து நிறுவனங்களை ஒருங்கிணைத்து ஒரு கூட்டமைவினை அமைத்து மாற்று திறனாளிகளுக்கான துறைகளை ஒன்று சேர்ப்பதில் அர்மான் முக்கிய பங்கினை ஆற்றியுள்ளார்.
- அர்மான் 2009-லிருந்து இயங்கி வரும் பல்வேறு குறைபாடுகளுக்கான மறுவாழ்வு மற்றும் பயிற்சி மையத்தின் தலைவராக இருந்துள்ளார்.
- குறைபாடுகளுடன் கூடிய நபர்களுக்கு அதிகாரமளித்தலுக்காக பணியாற்றும் இந்தியாவின் ஒரே கலப்பு - குறைபாடுகளுக்காக வாதாடும் நிறுவனம் NCPEDP ஆகும். இதன் தலைமையகம் புதுதில்லியில் உள்ளது.

## வருடத்தின் தொழிலதிபர் விருது

- Healthcare at HOME (HCAH) நிறுவனத்தின் இணை-நிறுவனர் மற்றும் முதன்மை நிர்வாக இயக்குநரான விவேக் ஸ்ரீவஸ்தவா, 8வது இந்திய வருடாந்திர தொழிலதிபர் விருதளிப்பு நிகழ்வில் மதிப்புமிக்க இவ்வருடத்தின் தொழிலதிபர் விருதினை வென்றுள்ளார்.
- ப்ரான்சைஸ் இந்தியா (Franchise India) மற்றும் ஸீ வர்த்தகம் (Zee Business) உடனான ஊடக பங்களிப்பு ஆகியவற்றுடன் இணைந்து இந்திய தொழிலதிபர் (Entrepreneur India Media) ஊடகத்தினால் புதுதில்லியில் உள்ள ஏரோ சிட்டியின் J.W.மேரியாட் ஹோட்டலில் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டது.

# விளையாட்டுச் செய்திகள்

## ஆசிய இளைஞர் மல்யுத்த சாம்பியன் ஷிப்

- புதுதில்லியில் நடைபெற்ற ஆசிய இளநிலை மல்யுத்த சாம்பியன்ஷிப்பின் தொடக்கத் தினத்தன்று, இந்தியா இரண்டு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலத்துடன் நான்கு பதக்கங்களை வென்றுள்ளது.
- இந்தியாவின் க்ரீக்கோ ரோமன் மல்யுத்த வீரர் சஜன் (வலது), 77 கிலோகிராம் எடைப்பிரிவில் சாம்பியனாக வெளிப்பட்டுள்ளார். மேலும் அவர் தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- விஜய் மற்றும் ஆர்யன் பாவர் வெள்ளிப் பதக்கத்தினை வென்றுள்ளனர். சுனில் குமார், 87 கிலோகிராம் எடைப்பிரிவில் வெண்கலப் பதக்கத்தினை வென்றுள்ளார்.

## ஆசிய விளையாட்டுப் போட்டிகள் - 2018

- வரவிருக்கும் 18வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு இந்தியக் குழுவின் தலைவராக (Chef de Mission - CDM) இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் (Wrestling Federation of India - WFI) தலைவர் பிரிஜ் பூசன் சரண் சிங் அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் 2018-ம் ஆண்டு பதிப்பு, இரட்டை நகரமான ஜகார்த்தா மற்றும் பாலம்பங்கில் ஆகஸ்ட் 19லிருந்து செப்டம்பர் 2 வரை நடைபெற உள்ளது.
- தலைவருடன் 4 துணைத் தலைவர்களும் அதில் (Deputy Chief de Missions) நியமிக்கப்பட்டுள்ளனர்.
- 4 துணைத் தலைவர்கள்
    - ராஜ் குமார் சச்சேட்டி
    - கோல் சத்யவ்ராத் சியோரான்
    - பால்பிர் சிங் கஸ்வாகா மற்றும்
    - தேவ் குமார் சிங்

# இதரச் செய்திகள்

## புதிய 100 ரூபாய் நோட்டுகள் - RBI


- மகாத்மா காந்தி (புதிய) தொடர்களில் லேவண்டர் நிற 100 ரூபாய் நோட்டுகளை இந்திய ரிசர்வ் வங்கி விரைவில் அறிமுகப்படுத்த உள்ளது.
- 100 ரூபாய் நோட்டின் முன்பகுதியில் மகாத்மா காந்தியின் முகமும் பின்பகுதியில் நாட்டின் பண்பாட்டுத் தளத்தினை சிறப்பிக்கும் அம்சங்களைக் கொண்ட "ராணி கி வாவ்" தளமும் சித்தரிக்கப்பட்டுள்ளன.
- 11வது நூற்றாண்டு அரசன் பீமாவின் நினைவாக கட்டப்பட்ட குஜராத்தின் பதானில் உள்ள படிக்கட்டுக் கிணறுத் தளம் "ராணி கி வாவ்" UNESCO-ன் உலக பாரம்பரியத் தளமாகும்.

# NEW ₹100 CURRENCY NOTE

**COLOUR:** LAVENDER/VIOLET **DIMENSIONS:** 142MM WIDTH, 66MM HEIGHT

## DESIGN ELEMENTS

- Rani Ki Vav (Queen's stepwell) (UNESCO World Heritage Site Located at Gujarat's Patan)
- Swachh Bharat logo and slogan
- Gandhi ji's Portrait




testbook.com

## FEATURES FOR VISUALLY IMPAIRED

- Intaglio or raised printing of Mahatma Gandhi Portrait, Ashoka Pillar emblem.
- Raised Triangular Identification Mark with micro-text 100
- Four Angular Bleed Lines both on the right and left sides of the note




- - - - - - - - - - - - - - -